26th March 1969]

கேங்க் மஸ்தூர்கள்

திரு வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேங்க் மஸ்தூர்கள் தங்களின் வேலையை நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசிற்கு கோரிக்கைகள் தந்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அரசு அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம்.

(இ) பொதுப்பணித் துறை கேங்க் மஸ்தூர்கள் அடிக்கடி அரசினை வேண்டியதற்கிணங்க நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை கேங் மஸ்தூர்களின் பணிவிதி முறை முதலியன பரிசீலிக்க, அரசு ஒரு தனி அலுவலரை நியமித்தது. அவர் தம் அறிக்கையை நெடுஞ்சாலை கிராமப் பணித் தலைமைப் பொறியாளருக்குச் சமர்ப்பித்துள்ளார். தலைமைப் பொறியாளர் அவ் வறிக்கையின் மேல் தம் கருத்துரையும் வழங்கியுள்ளார். ஆயினும் சில குறிப்பிட்ட பரிந்துரைகள் மேல் அவருடைய கருத்துரை தெரிவிக்கவில்லை. அவற்றைத் தெரிவிக்கும்படி, மீண்டும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் தமிழ்நாடு (Gang Mazdoors) சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மாண்புமிகு அமைச்சர்களைச் சந்தித்து தங்களுடைய குறைகளை நிவர்த்திக்க கூறினார்களா ? அப்படிக் கூறியிருந்தால், அவர்களுக்கு அமைச்சர் ஏதேனும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்களா ? குறைந்த அளவுக்கு 10 சதவீதமாவது தங்களுடைய வேலை நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு அனுதாபத்தோடு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : Gang Mazdoors சார்பாக என்னைச் சந்தித்ததாக ஞாபகம். வாக்குறுதி ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

Narayana Thevan Kalvoi

* 227 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received the representations of the people of Mudukulathur to carry out the "Narayana Thevan Kalvoi" Scheme;

(*b*) if so, whether there is any proposal regarding the scheme, with the Government ; and

(*c*) the number of years for the completion of this scheme?

நாராயணத் தேவன் கால்வாய்.

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "நாராயணத் தேவன் கால்வாய்" என்ற திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு முதுகுளத்தூர் மக்களின் முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அது பற்றி அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

(உ) எத்தனை ஆண்டுகளில் அந்தத் திட்டம் நிறைவேறக்கூடும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) முதுகுளத்தூர் வட்டத்தில் நாராயணத்தேவன் கால்வாய் என்ற பெயரில் திட்டம் எதுவும் இல்லை.

(இ), (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை,

திரு வி. தங்கபாண்டியன். தலைவர் அவர்களே, அந்தக் கால்வாயை நாராயணன் கால்வாய் என்றும் சொல்வதுண்டு. அப்படி அந்த நாராயணன் கால்வாய்த் திட்டம் பற்றிய கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடமிருந்து அரசுக்கு வந்ததா? அது குறித்து செயல்குறிப்பு ஏதேனும் அமைத்து நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: நாராயணன் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 10·25 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் 5 பகுதியில், 3 பகுதிகள் குறித்த வேலையில் ரூ. 5·41 லட்சம் செலவாகி முடிந்திருக்கிறது. எஞ்சிய பகுதியில் உள்ள நிலச் சொந்தக்காரார்கள் மறுப்பு தெரிவித்திருப்பதால் அது முடிவான பிறகு, மீண்டும் வேலை தொடங்கும்.

Sub-Inspector, Dindigul.

* 228 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any resolution was passed at the Dindigul Municipal Council meeting held in February 1968 and sent to the Tamil Nadu Government to reprimand and take action against the Taluk Sub-Inspector for having spoken in a derogatory manner of the Councillor Thiru Rajayya; and

(*b*) if so, the action taken thereon?

திண்டுக்கல் சப்-இன்ஸ்பெக்டர்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகரசபைக் கூட்டத்தில் 1968 பிப்ரவரி மாதம் நகரசபை உறுப்பினர் திரு ராஜய்யாவை தாலூக்கா சப்-இன்ஸ்பெக்டர் தரக் குறைவாகப் பேசியதைக் கண்டித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி. (அ) and (இ) மேலவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

Community Development Reorganisation

* 229 *Q.*—THIRU V. ISVARMURTHI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken on Thiru Murugesa Mudaliar's Report on the Community Development Reorganisation?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU V. ISVARMURTI: When Thiru Murugesa Mudaliar's Report was released, there was a report to the effect that the Government would retrench the panchayat union staff and make a reorientation of financing the farmers through Land Mortgage Banks and use the revenue staff. The Panchayat Union staff have, in fact, become surplus. May I know whether the Government

* Printed as Appendix on page 62.